1994 மார்ச் 25]

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடல் பெற்ற தலமாகிய திருமழபாடியில், அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஊழல் ஆட்சியாகிய தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட சமயத்தில், சில விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டது. Education for all before 2000 A.D. என்ற இலக்கை couple of years advance-ஆகவே அச்சீவ் செய்யவிருக்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் சூப்பர் அரசு, மாணவர்களின் நலன் கருதி விரைவில் கட்டிட வசதி பெற ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிதாகப் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு-கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு-ஐம்பது சதவிகித சமுதாய ஈடுபாட்டின் மூலம் இப்பொழுது அரசு அனுமதி அளித்து வருகிறது. உறுப்பினரவர்கள், பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாக ஐம்பது விழுக்காடு தொகையைச் செலுத்துவதாகத் தீர்மானம் இயற்றி அனுப்புவார்களானால், வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்-ஆசிரியர் கழகம், பொதுமக்களிடமிருந்து பெற்ற சிறு டொனேஷனை வைத்து, இப்பொழுது கட்டிட வேலை ஆரம்பித்து விட்டோம். வீர சபதம் ஏற்ற எங்கள் புரட்சித் தலைவி அரசு, தீயவர்களால் தீக்கிரையாக்கப்பட்ட எங்கள் பள்ளிக் கட்டிடத்தை விரைவில் கட்டித் தர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிதிநிலை அடிப்படையில் அரசு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி கேட்ட ஒரு துணைக் கேள்வியின்பொழுது நான் இடையிலே குறுக்கிட்டு ** என்று சொன்னேன். அது அவைக் குறிப்பிலே இருப்பது அவ்வளவு சரியாக இருக்காது. எனவே, அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 96, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

96–

சின்னசேலம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்

* *19959*–**திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சின்னசேலம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) :

அரசாணை (நிலை) எண் 672, கல்வி, நாள் 13-7-1993-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, 5 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் அந்தப் பள்ளிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.00

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சின்னசேலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புவியியல் மற்றும் ஆங்கிலத் துறைகளில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை. எனவே இந்த இரண்டு துறைகளுக்கும் ஆசிரியர்களை நியமிக்க அரசு உடனடியாக முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனுமதிக்கும் பணியிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், அந்தப் பணியிடங்களின் தேவையின் அடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையிலும் இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறக் கல்லூரியாகத் திகழ்கின்ற இந்த அரசு, மேல்நிலைப் பள்ளியில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும்போது, அந்தப் பள்ளிக்கு வருகை தரும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்கள் எண்ணிக்கை குறித்து ஆய்வு செய்து, அறிக்கை தருவதற்காக ஒரு குழு

1994 மார்ச் 25]

அமைக்கப்பட்டு இருக்கிறது. அறிக்கை பெறப்பட்டவுடன், அரசு எடுக்கும் முடிவின் அடிப்படையில், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 97, திரு. ஆர்.டி. அரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

97 -

விருத்தாசலத்தில் ஓர் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்தல்

*** 20529-திரு. ஆர். டி. அரங்கநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறபோது, தற்போது விருத்தாசலம் கோட்டத்தில் உள்ள சங்கராபுரம் வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி கோட்டத்திற்குச் சென்றுவிடுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விருத்தாசலம் கோட்டத்திற்காக விருத்தாசலத்தில் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ.எம் பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு விருத்தாசலம் கோட்டத்தில் இருந்த சங்கராபுரம் வேலைவாய்ப்பு அலுவலகம், விழுப்புரம் - ராமசாமி படையாச்சியார் மாவட்டத்தின் தலைநகரமான விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) விருத்தாசலத்தில் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் தற்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டு வேலைப்பளுவைக் குறைக்கக்கூடிய அளவிலே, மக்களின் அன்றாடத் தேவைகளை எளிதில் செய்வதற்காகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் மாவட்டம் ஒன்றாக இருந்தபோது, சங்கராபுரத்தில் இருந்த வேலைவாய்ப்பு அலுவலகம் தற்போது விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலே இருக்கிற